முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 13/2021

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ம் நாள் இன்று இந்த வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரகாஷ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சேகர் | கிராமம் | : சேடர்பாளையம் |
| வயது | : 30 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 28–10–2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் வாதியின் மகன் என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவாவில் என்ன போட்டுள்ளார் என்று நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்தேன். நான் வாதியின் மகன் என்பதால் இந்த தாவாவில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் வாதியின் வழக்குப்படியே வாதிக்கு கூட்டுப் பாத்தியம் என்றால் சரிதான்.

2) 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் வாதியின் வழக்குப்படி பாத்தியமுள்ளதா என்றால் இல்லை. சொத்துக்கள் அனைத்தையும் என் அம்மாவை விட்டுவிட்டு விற்பனை செய்து விட்டார்கள். 85 செண்ட் மட்டும் தான் காலியாக உள்ளது. சொத்துக்களை விற்பனை செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டு உள்ளதா என்றால் என் அம்மா படிக்காததால் தெரியவில்லை. கடந்த 2020 ம் ஆண்டே என் அம்மாவின் வழக்குப்படி சொத்துக்கள் விற்பனையான விவரம் தெரியும் என்றால் தற்போது தான் எனக்கு தெரியும். எப்போது தெரியும் என்றால் எனக்கு ஜனவரி 2025 ம் ஆண்டு தான் தெரியும்.

3) நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் விற்பனை செய்த முயற்சிகள் செய்தார்கள், வேலி போட முயன்றார்கள் அதனால் காவல் நிலையத்தில்

வாய்மொழியாக புகார் செய்தோம் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தற்போது வரை அது தொடர்பாக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முழுச் சொத்து விவரம் குறித்து இந்த தாவாவில் சொல்லி உள்ளோமா என்றால் ஆமாம். ஆனால் 85 செண்ட் குறித்து தான் தாவா தாக்கல் செய்துள்ளேன்.

4) தாவாச் சொத்து என் அம்மாவிற்கு பாத்தியம் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் இல்லை என்றால் அ.வ.எண்.510/1995 வழக்கின் முதல்நிலை தீர்ப்பாணையில் என் அம்மா பெயர் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளோம். அ.வ.எண்.510/1995 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணை பெறப்படவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து என் அம்மா பெயரில் உள்ளது என்பதைக் காட்ட வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. வருவாய் துறை ஆவணங்களில் என் அம்மா பெயர் இல்லை.

5) நான் தாக்கல் செய்த முதல் விசாரணையின் பத்தி 10ல் பேச்சு வார்த்தையின் போது நானும் உடன் இருந்தேன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சு வார்த்தை நடந்ததாக என் அம்மா வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதல் விசாரணையின் பத்தி 13ல் வேலி அமைத்து சைட்டுகளாக பிரித்து விற்பனை செய்ய முயற்சித்தார்கள் நானும் என் தாயாரும் சென்று அதை தடுத்தோம் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட விவரத்தை என் அம்மா தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லி உள்ளார்.

6) நான் சாட்சியம் அளிப்பது போல் எதுவும் சொல்லவில்லை, என் அம்மாவிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த முதல் விசாரணையின் பத்தி 18ல் தடங்கல் மனு ஒன்றை நானும் கொடுத்தேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த விவரத்தை தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லி உள்ளேன். நான் சாட்சியம் அளிப்பது போல் எதுவும் சொல்லவில்லை, என் அம்மாவிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) நான் வாய்மொழியாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அது தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தடங்கல் மனு கொடுத்தது தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். தற்போது தாக்கல் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் வேலி அமைத்து சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன்.

8) 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் வேலி அமைத்து சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்ததார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் எந்த சட்ட விரோத நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா முழுச் சொத்துக்குமே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி உள்ளேன் என்றால் சரிதான்.

9) வாதியின் வழக்குப்படி 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாத்தியம் உள்ள நிலையில் முழுச் சொத்துக்கும் பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.10.28 14:37:07 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.